வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06 08.09.2025 திங்கட்கிழமை இதழ் : 251 பக்கங்கள் : 08



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழினப் படுகொலைகளுக்கு உள்ளக விசாரணை மூலம் நீதி

## ஜே.வி.பியின் பொது செயலர் ரில்வின் யாழில் தெரிவிப்பு

- கச்சதீவை வேறெவரும் உரிமை கோர முடியாது

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 08

“தமிழின படுகொலைகளுக்கு உள்நாட்டு விசாரணை மூலமே நீதி கிடைக்கும் - சர்வதேச தலையீடு தேவையற்றது”, - இவ்வாறு நேற்றையதினம் யாழ்ப்பாணம் வந்த ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



அத்துடன், “கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. அந்தத் தீவுக்கு தங்களுக்கு சொந்தமானது என்று இந்திய அரசாங்கம் உரிமை கோரவில்லை”, என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் தேசிய மக்கள் சக்தி கட்சியின் பணிமனையில் நேற்றையதினம் நூலகம் ஒன்றை ரில்வின் சில்வா திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

தமிழின படுகொலைக்கு நீதி கோரிய போராட்டங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

“உண்மையில் இது எமது நாட்டின் பிரச்னை. எங்களின் பிரச்னைகளில் வெளிப்புற சக்திகளின் தலையீடு தேவையற்றது. கடந்த அரசாங்கங்களின் காலத்தில் விசாரணைகள் நடைபெறவில்லை என்பது உண்மை. ஏனெனில், அவர்கள் அந்தக் குற்றங்களுடன் 07

# ஜெனிவா கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது

ஜெனிவா, செப். 08

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு (இலங்கை நேரம் மதியம் 1.30 மணி) ஆரம்பமாகிறது.

இன்றைய தினம் உலகளாவிய மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் உரையாற்றுவார். இதன்போது, இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்படும். 07

# உள்நாட்டு விசாரணை எமக்கு தீர்வை தராது!

## வலி. கிழக்கு தவிசாளர்

யாழ்ப்பாணம், செப். 08

தமிழ் மக்கள்மீதான அரச பயங்கரவாதமும் இனப் படுகொலையும் அரச கொள்கையாகவே முன்னெடுக்கப்பட்டன. இது விடயத்தில் உள்நாட்டு விசாரணைகளோ அல்லது பொறிமுறைகளோ தீர்வைத் தராது. எமக்கு சர்வதேச நீதியே தேவை - இவ்வாறு வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார். 07

# பெரும்பாலான கைதுகள் அரசியல் கண்காட்சியே!

## ஐக்கிய தேசிய கட்சி சொல்கிறது

கொழும்பு, செப். 08

நாட்டில் நடைபெறும் கைதுகளில் பெரும்பான்மையானவை அரசியல் கண்காட்சிக்காகவே நடக்கின்றன. கைதாகும் 100 பேரில் 98 பேர் விடுதலை செய்யப்படுகின்றனர். இந்த கலாசாரத்தை அரசமைப்பு திருத்தம் ஊடாக மாற்ற வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் காலி மாவட்ட 07

வெள்ளைக்கொடி விவகாரம் உட்பட

# எந்த விசாரணைகளுக்கும் அரசு தடையாக இருக்காது

## சொல்கிறார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, செப். 08

“வெள்ளைக்கொடி விவகாரம் மட்டுமல்ல முன்னெடுக்கப்பட வேண்டிய எந்த விசாரணைகளுக்கும் அரசாங்கம் தடையாக இருக்காது. ஆனால், விசாரணைகளின் பொறுப்பாளர்களாக இலங்கையே இருக்கும்”, - இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ஹரிணி அமரசூரிய.

அத்துடன், அரியாலை மனிதப் புதைகுழி மாத்திரமல்ல வேறு பல மனிதப் புதைகுழிகள் குறித்து விசாரணைகள் நடக்கின்றன. இந்த விசாரணைகள் ஊடாக பக்கச்சார்பின்றி நேர்மையாக அரசாங்கத்தால் செயல்பட முடியும் என்பது உறுதியாகும்”, என்றும் கூறினார்.

தவிர, “உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையால்தான் ஜெனிவா குற்றச்சாட்டுகளும் 07



# மாணவி கிருஷாந்தி நினைவேந்தப்பட்டார்

- இ.ராஜ்குமார் -

கொழும்பு, செப். 08

இராணுவத்தால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு செம்மணி சந்தியில் நேற்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் 07

# பிறந்து 21 நாட்களேயான சிசு வாந்தியெடுத்து உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 08

பிறந்து 21 நாட்களேயான சிசு ஒன்று வாந்தி எடுத்த பின்னர் உயிரிழந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சுன்னாகம் - சபாபதிப்பிள்ளை வீதியை சேர்ந்த தம்பதி ஒன்றின் ஆண் குழந்தையே 07

மாகாண சபைகள் தேர்தல்:

# உரிய அமைச்சு, அரசியல் கட்சிகளுடன் பேச முடிவு!

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, செப். 08

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடனும் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் தேர்தலை நடத்துவற்கான சாதகமான 07

அரியாலை மனிதப் புதைகுழி:

# சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் நிபுணத்துவ உதவி கோரியது அரசு!

கொழும்பு, செப். 08

அரியாலை உட்பட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் நிபுணத்துவ உதவியை அரசாங்கம் கோரியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல் கட்டமைப்பு, நாட்டில் காணப்படும் மனித புதைகுழி விவகாரங்களுக்கான நிபுணத்துவமே கோரப்பட்டுள்ளதாக காணாமல் போனவர்கள் பற்றிய பணிமனை (ஓ. எம். பி.) தெரிவித்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவை சங்கம் 07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டம்



யாழ்ப்பாணம், செப். 08

தையிட்டியில் தனியாரின் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்ற வலியுறுத்தி நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தையிட்டி கிராம மக்களாலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

உள்ளூராட்சி தேர்தல்:

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தமிழ் வேட்பாளர்கள்மீது வழக்கு

கிளிநொச்சி, செப். 08

உள்ளூராட்சி தேர்தலில் பூநகரி பிரதேச சபைக்கு போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து வேட்பாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் வரவு - செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறியமைக்காகவே இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு போட்டியிட்ட வேட்பாளர்களில் ஒரு சிலரை தவிர ஏனைய அனைத்து வேட்பாளர்கள் மீதும் வழக்குத்தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஒரு குடும்பத்தை சேர்ந்த கணவன், மனைவி, மகன், மருமகள், மகள் என அனைவரும் உள்ளடங்குகின்றனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 - 11 - 1947 | 06 - 09 - 2025 |

### கந்தையா நடராசா

(ஓய்வுபெற்ற மேலதிக காணிப் பதிவாளர்)

காரைநகர், வெடியரசன் வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அபூபக்கர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்றுமுன்தினம் (06.09.2025) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் கேசவன் (ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜனுசியா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தி (ஆசிரியர், யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்) சாருஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமானாரும் பவிசனா, அஷித்தா, ருஷாரா ஆகியோரின் அன்பு பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 197, அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்**





பண்டத்தரிப்பு - வடலியடைப்பு புதறானை சிறீ சித்திவிநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்ற வேளை...



# ஆன்மீக அருளுரை நடைபெற்றது

வடமராட்சி, செப். 08

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம ஆலய திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரமத்தின் நாளாந்த நிகழ்வாக அருளுரை நடைபெற்று வருகிறது.

இதில், "மனிதனுடன் ஆன்மீகமும் உளவியலும்" என்ற பெரும்பொருளில் ஆன்மீக அருளுரையைத் திருமதி சிறிமேனன் வினோதினி (யாழ்ப்பாணம்,தேசிய இளைஞர் சேவை மன்றம்) நேற்றுமுன்தினம் நிகழ்த்தினார். (ஐ-02)

# இ.போ.ச. பேருந்துகள் தாக்கப்பட்டு சேதம்!

கொழும்பு, செப். 08

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இரு பேருந்துகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்கள் இருவரும் தாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதில், காயமடைந்த ஊழியர்கள் இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எசல பெரஹெரவுக்காக சிறப்பு போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் மகியங்கனை பேருந்து நிலையத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. இதில், சுமார் 2 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக உடதும்பர டிப்போ முகாமையாளர் குறிப்பிட்டார்.

பேருந்து நிலையத்துக்குள் மோட்டார் சைக்கிள் நுழைய அனுமதிக்கவில்லை என்று கூறியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அறிய வருகிறது.

சந்தேகநபர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)



# நிமலராஜன் கொலை வழக்கு விசாரணை அறிக்கை வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 08

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்ட அமைப்பால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இதன்போது நிமலராஜனின் உருவப் படத்துக்கு சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு. செல்வகுமாரால் குறித்த அறிக்கையின் முதல் பிரதி நிமலராஜனின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதுடன் குறித்த அறிக்கையின் பிரதிகள் கலந்துகொண்ட ஏனையோருக்கும் வழங்கப்பட்டன. (ஐ)

# காந்தி குறித்து கருத்தரங்கு



யாழ்ப்பாணம், செப். 08

மகாத்மா காந்தி ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் 'நடைமுறையில் காந்தியக் கொள்கை', என்ற தலைப்பிலான இளைஞர்களுக்கான கருத்தரங்கு யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் நேற்று முன்தினம் ஆச்சிரம அறங்காவலர் த. நந்திவர்மன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தமர்வில் மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் க. பழனித்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரும் காந்தீயம் பத்திரிகை ஆசிரியருமான எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, ஓய்வு நிலை அதிபர் செ.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கருத்தமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் மூத்த உறுப்பினர் அமரர் சரஸ்வதி தம்பிப்பிள்ளை நினைவாக இந்தக் கருத்தமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.09.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஹேரத்தின் ஜெனிவா பயணம்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் இரு தரப்பு சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார். அவர் அங்கு கூறவுள்ள விடயம் மிகவும் தெளிவானது. அதாவது, இலங்கையில் எந்தவொரு வெளிநாட்டுத் தலையீடுகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை - அதனை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். ஆனால், உள்நாட்டில் விசாரணைகளை மேற்கொள்வோம்.

கடந்த ஆட்சியாளர்கள் குற்றங்களில் பங்குகொண்டவர்கள். அதனால் அவர்களால் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க முடியவில்லை. ஆனால், நாங்கள் அப்படியானவர்கள் அல்லர். கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் எவற்றுடனும் நாங்கள் தொடர்புபட்டவர்கள் அல்லர். எனவே, உள்ளக விசாரணையை எங்களால் திறம்பட முன்னெடுக்க முடியும். இதனைத்தான் விஜித ஹேரத் முன்வைக்கவுள்ளார். ஏற்கனவே, இது தொடர்பில் றில்வின் சில்வா தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்.

மகிந்த ராஜபக்ஷ தொடக்கம் பின்னர் ராஜபக்ஷக்களின் பாராளுமன்ற ஆதரவுடன் அதிகாரத்திலிருந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் வரையில் வெளிநாட்டுத் தலையீடுகளை எதிர்க்கும் கொள்கை நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். வெளிநாட்டுத் தலையீடுகளை அனுமதிப்பதில்லை என்பதுதான், மனித உரிமை விவகாரங்கள் தொடர்பான அவர்களின் கொள்கை நிலைப்பாடாக இருந்தது. ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாடும் அதுதான். இந்த அடிப்படையில்தான் ஜெனிவாவை அவர்கள் அணுகுவார்கள்.

இதில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும் முரண்படப் போவதில்லை. ஏனெனில், அவர் முரண்படுவதால் எந்தவொரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இலங்கை விஜயத்தின் போது பேரவையின் ஆணையாளர் ஜனாதிபதி அநுரவிடம் உள்ளக பொறிமுறையை வலியுறுத்தியிருப்பதாகவே குறிப்பிட்டிருக்கிறார். ஒரு நாட்டின் அரசாங்கம் சில விடயங்களில் இணங்கிச் செல்வதை மறுத்தால் அதற்கப்பால், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையால் எதனையும் செய்ய முடியாது. பேரவையால் வெறுமனே பரிந்துரைகளை மட்டுமே முன்வைக்க முடியும். இப்போதும் அதுதான் நடக்கப் போகிறது.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ரணில் - மைத்திரி அரசாங்கம் முதன்முதலாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி ஆதரவளித்தது. அந்த ஆதரவின் அடிப்படைகூட, "சில மீறல்கள் இடம் பெற்றிருக்கின்றன. அதற்கான விசாரணை தேவை என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்", என்பதை முதன்முதலாக ஏற்றுக்கொண்டது. ஆனால், அப்போதும் உள்ளக அடிப்படையில்தான் விடயங்கள் முன்னெடுக்கப்படும் என்பதில் உறுதியாக இருந்தது. எனினும், தேவையான வெளியக ஆலோசனைகளை உள்வாங்கிக் கொள்வதில் ரணில் முரண்படவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியைத் தொடர்ந்து அனைத்தும் முடிவுக்கு வந்தன. பின்னர் ரணில் பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியானபோது, மைத்திரி காலத்து ரணிலாக இருக்கவில்லை. மாறாக, அவரும் உள்ளக அடிப்படையில்தான் விடயங்கள் முன்னெடுக்கப்படும் என்பதிலேயே உறுதியாக இருந்தார்.

இங்குள்ள அடிப்படையான அரசியலை புரிந்துகொண்டால், நாட்டுக்காக போராடிய இராணுவத்தை காட்டிக்கொடுக்க முடியாது - காட்டிக் கொடுப்பதை அனுமதிக்க முடியாது என்பதே இதற்கு பின்னாலுள்ள அரசியலாக இருக்கிறது. இதற்கு ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் விதிவிலக்கல்ல. இந்த நிலைமையில் வெளியாரின் தலையீடு ஒன்று நிகழவேண்டுமாயின் அது முயலில் கொம்பை தேடும் முயற்சியாகவே முற்றுப்பெறும். ஆனால் தமிழர் தரப்புக்களோ, சர்வதேச விசாரணை என்னும் கோஷத்தோடு மட்டுமே மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால், இதனை கடந்த பதினாறு வருடங்களாக வெளியார் கண்டு கொள்ளவில்லை. ஏனெனில், இது அடிப்படையிலேயே சிக்கலானது. அதிலும் தற்போதுள்ள நிலையில் இன்னும் சிக்கலானது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் மென்மையான அழுத்தங்கள் தொடரும்போதே - மறுபுறம் அரசாங்கத்தோடு இது தொடர்பில் தமிழர் தரப்பு பேச்சுகளை முன்னெடுப்பதுதான் சரியானது.

# எதிர்வரும் நாட்களில் வடக்கு, கிழக்கில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்

கொழும்பு, செப். 08

எதிர்வரும் நாட்களில் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகளவில் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும். மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வெகுமதி வழங்குவதாக வரும் செய்திகள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, செப். 08

வங்கி வெகுமதிகளை வழங்குவதாகக்கூறி சமூக ஊடகங்களில் ஒரு மோசடி செய்தி தற்போது பகிரப்படுகிறது என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறு பரவும் செய்தி மோசடியானதும் மிகவும் ஆபத்தானதுமாகும் என்று பொலிஸார் மேலும் சுட்டிக் காட்டுகிறது.

இதன்மூலம் தனிப்பட்ட தகவல்களைத் திருடப்படுகின்றன. அத்துடன், கைபேசிகளின் மென்பொருளை மாற்றியமைக்கப்படுகின்றன என்றும் தெரிய வருகிறது.

கணினி அவசரகால பதில் மன்றத்திற்கும் இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அதன் தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்தா தெரிவித்துள்ளார்.

கைபேசிகள் மூலம் வங்கி செயல்பாடுகளை முன்னெடுப்பவர்கள் இதுபோன்ற போலிச் செய்திகள் தொடர்பில் அதிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். (ஐ)

# மன்னம்பெரிக்கு விளக்கமறியல்

கொழும்பு, செப். 08

போதைப்பொருள் தயாரிப்புக்கான இரசாயனம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பியல் மன்னம்பெரியை விளக்கமறியலில் வைக்க வலஸ்முல்லை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மித்தெனியவில் போதைப் பொருள் தயாரிக்கப் பயன்படும் இரசாயனம் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் நேற்று நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அப்போதே சந்தேகநபரை 7 நாட்கள் தடுப்பு காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 5ஆம் திகதி மித்தெனிய - தலாவ பகுதியில் உள்ள ஒரு வீட்டில் புதைக்கப்பட்டிருந்த ஐஸ் என்ற போதைப் பொருளை தயாரிக்கப் பயன்படுத்தப் படும் சுமார் 50 ஆயிரம் கிலோ இரசாயனம் கண்டு பிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தண்டவாளத்தில் படுத்தவர் தலை துண்டாகி உயிரிழப்பு

மட்டக்களப்பு, செப். 08

தண்டவாளத்தில் தலை வைத்து படுத்திருந்தவரை ரயில் மோதியதில் தலை துண்டாகி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - சந்திவெளி - ஜீவபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணியவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த 28 வயதான இரு பிள்ளைகளின் தந்தையான வரதராஜா கிருஷ்ணகாந்தன் என்பவரே உயிரிழந்தார்.

இவர் மதுபோதையில் தண்டவாளத்தில் தலை வைத்து படுத்திருந்தார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐந்து கைக்குண்டுகள், வெடிபொருட்கள் மீட்பு

அம்பாந்தோட்டை, செப். 08

அம்பாந்தோட்டை, மித்தெனியா தலாவ பகுதியில் ஐஸ் ரக போதைப்பொருளை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியிலிருந்து கைக்குண்டுகளும் வெடிபொருட்களும் மீட்கப்பட்டன.


மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணை அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் மாலை இந்த வெடிபொருட்களை மீட்டனர்.

இதன்போது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஐந்து கைக்குண்டுகள், ரி- 56 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 17 தோட்டாக்கள் மற்றும் ஏனைய துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 3 தோட்டாக்கள் என்பன அப்பகுதியில் உள்ள மரவள்ளிக்கிழங்கு தோட்டத்துக்கு அருகில் புதிதாக வெட்டப்பட்ட குழியிலிருந்து மீட்கப்பட்டன. (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**இடபம்**
ஆன்மிக பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உங்கள் புது முயற்சிகளை ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**சிம்மம்**
கணவன் மனைவிக்குள் ஆரோக்யமான விவாதங்கள் வந்து போகும். வெளிவட்டாரத்தில் தொடர்புகள் விரிவடையும்.வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**துலாம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சகோதர வகையில் அலைச்சல் இருக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**மகரம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் உதவுவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். புதிய பாதை தெரியும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். சக ஊழியர்களால் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனம் தொந்தரவு தரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

# முல்லைத்தீவு விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, செப். 08

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.


யாழ்ப்பாணத்திலிருந்து - புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.


இதன்போது, அதில் ஒரு மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றும் ஒருவர் காயமடைந்த நிலையில் தர்மபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# சிறார்களின் செயல்பட்டு மகிழ்வோம் நிகழ்வு





யாழ்ப்பாணம், செப். 08

இணுவில் பொது நூலக சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் செயல்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்று முன்தினம் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாலை அணிவித்து, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க, கிருமிய நடனத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு நூலக கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றிய பின்னர் பிரதம விருந்தினர் நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். பின்னர் கலாசார நிகழ்வுகள், விளையாட்டுகள், இசையும் அசைவும் நிகழ்வு, பரிசில்கள் வழங்கல் என்பன நடைபெற்றன.

ம. கஜந்தரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் நா .சிவநேசன் கலந்து சிறப்பித்ததுடன் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

# கவி பாரதி சனசமூக நிலைய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 08

யாழ்ப்பாணம், கொட்டடி சோலைபுரம் கவி பாரதி சனசமூக நிலையத்துக்கான கட்டடம் மக்களினதும் இளைஞர்களினதும் முயற்சியால் அமைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்ட யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சனால் திறந்து வைக்கப்பட்ட இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்த கல்விக் காருண்யன் ஈ. எஸ். பி. நாகரத்தினத்தால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

யாழ். மாநகர சபை உறுப்பினர்களான சி. சாரூபன், எஸ். வாசு, சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகளான இ. மகிதரன், தெ. நிஷாகரன், ஜோ. ரதீஸ் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கவி பாரதி சனசமூக நிலைய அங்கத்தவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)





# அராலி தெற்கு சைவத் தமிழ் இளைஞர் மன்ற 10ஆவது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது





யாழ்ப்பாணம், செப். 08

யாழ்ப்பாணம், அராலி தெற்கு சைவத் தமிழ் இளைஞர் மன்றத்தின் 10ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் அராலி ஆகாயக்குளம் விநாயகர் திறந்த வெளியரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

முதலில் அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்துக்கு முன்பாகவிருந்து விழா [illegible] பண்பாட்டு ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தின் போது பொம்மலாட்டம், சிலம்பாட்டம் என்பன நடைபெற்றன.

பின்னர் கொடியேற்றம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மங்கல இசை, வரவேற்பு நடனம், கலை நிகழ்வுகள், விருந்தினர்கள் உரை, இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கல் என்பன நடைபெற்றன.

இளைஞர் மன்றத்தின் தலைவர் பரமலிங்கம் திரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவர் அபிராமி கைலாசப்பிள்ளை பிரதம விருந்தினராகவும் சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார் சிறப்பு விருந்தினராகவும் கு. பாலமுருகன், மிலாஷினி றோகேசன், ப. சிந்துஜன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை அழைக்காதது சீனாவின் மூலோபாய முடிவு

## ஷங்காய் மாநாடு தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விளக்கம்

கொழும்பு, செப். 08

**"ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளை மதிப்பிட முடியாது. இரு நாட்டு உறவுகளும் நல்ல நிலையில் உள்ளன. இருப்பினும் ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டுக்கு அழைக்கப்பாமை அந்த நாட்டின் மூலோபாய முடிவு", என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் துஷார ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பது வேறுபட்ட விடயமாகும். இந்த அமைப்பில் இலங்கை நிரந்தர உறுப்பினராக அல்லாது உரையாடல் பங்காளியாகவே உள்ளது. இலங்கையை போன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, துருக்கி மற்றும் கட்டார் உள்ளிட்ட 14 நாடுகள் உரையாடல் பங்காளிகளாக உள்ளன. இந்த 14 நாடுகளில் பெரும்பாலான நாடுகளுக்கு இம்முறை அழைப்பு விடுக்கப்பட வில்லை. இலங்கைக்கு அழைப்பு வராதபோது, பொதுவாக அதில் நாம் கலந்து கொள்வதில்லை.

இதற்கான முக்கிய காரணம், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு தற்போது உச்சத்தில் உள்ளது. ஏனெனில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கடந்த ஜனவரியில் சீனா சென்றிருந்தார். பொதுவாக, அந்த காலப்பகுதியில் அவர்கள் எந்த ஒரு நாட்டுத் தலைவர்களையும் அழைப்பதில்லை. ஆனால், இந்த ஆண்டுக்கான முதல் அரசுமுறை பயணமாக இலங்கை ஜனாதிபதி அழைக்கப்பட்டிருந்தார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையே மிகவும் நெருக்கமான இரு தரப்பு உறவுகள் உள்ளன. வரும் ஒக்ரோபர் மாதத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் சீனா செல்கிறார். எனவே, இரு தரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை இந்தப் பயணங்களின் ஊடாக புரிந்துகொள்ள முடிகிறது - என்றார். (ஐ)

# அமைச்சர் லால் காந்தமீது விசாரணை நடத்துங்கள்!

## தயாசிறி எம். பி. சொல்கிறார்

கொழும்பு, செப்.08

சட்டவாட்சியின் கோட்பாடுகளுக்கு அமைய சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது. எனவே, 1988, 1989களில் தேசிய சொத்துகள் அழிக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சர் லால் காந்தவிடமிருந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் - என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

1988, 1989 காலப் பகுதியில் பல தேயிலை தொழிற்சாலைகள், பேருந்துகள், விவசாய சேவை மத்திய நிலையங்கள், மின் பிறப்பாக்கிகள் மற்றும் நெற் களஞ்சியசாலைகள் உள்ளிட்ட பல பொது சொத்துகள் தீக்கிரையாக்கப்பட்டன. மின் கம்பங்கள் உடைத்து நொறுக்கப்பட்டன.



அமைச்சர் லால் காந்த இவை தொடர்பிலான பிரதான சாட்சியாளராவார். எனவே, அவரிடமிருந்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவை தவிர மேலும் பல சம்பவங்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்கக் கூடியவையாக உள்ளன. எதிர்வரும் நாட்களில் அவை தொடர்பில் ஒவ்வொன்றாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் - என்று கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

# சிறிய ரயில் சேவையை இயக்குவதற்கு திட்டம்!

கொழும்பு, செப். 08

கிராமப்புற பாதைகளில் இயக்க மூன்று பெட்டிகள் கொண்ட சிறிய ரயில்களை உருவாக்க இலங்கை புகையிரதத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

குறித்த ரயிலில், ஒவ்வொரு பெட்டியும் டீசல் இயந்திரம் மூலம் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதே நேரம், மின்னணு அமைப்பால் கட்டுப்படுத்தப்படும் ரயில் பெட்டிகளை இணைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

சிறிய ரயில்களில் சுமார் 200 முதல் 240 பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். ஏற்கனவே சில ரயில் பேருந்துகள் (ரயில் பாதை



களில் ஓடக்கூடிய சக்கரங்களைக் கொண்ட ஒரு பெட்டி பேருந்து) இருந்தன.

ஆனால், தற்போதுள்ள கால அட்டவணைகளுடன் அவற்றை இயக்குவதில் நடைமுறை சிக்கல்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# "ரணில் பாராளுமன்றம் செல்லும் சூழலை அரசே உருவாக்கியுள்ளது"

கொழும்பு, செப். 08

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் செல்லக்கூடிய சூழலையும் அதற்காக அவரை சுற்றி பலமான சக்திகள் உருவாகக்கூடிய சூழலையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே உருவாக்கிக் கொடுத்துள்ளது. தலைமைத்துவ போட்டிக்கு அப்பால் சஜித் பிரேமதாஸ - ரணில் விக்கிரமசிங்க தரப்புகள் இணைந்தால் நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சியை கைவிட்டு தான் ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது. ஐக்கிய தேசிய கட்சிமீது முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள், அதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே அவற்றுடன் தொடர்பற்றவர்கள் அக்கட்சியிலிருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியை கட்டியெழுப்பினர்.

ஆனால், இன்று என்ன நடந்துள்ளது? ஐ.தே.க.வின் மூத்த உறுப்பினர்கள் மீது முன்வைக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புதிதாக கூறுவதற்கு எதுவுமில்லை. அவற்றில் பிரதானமானது மத்திய வங்கி பிணை முறி மோசடியாகும்.

ஆனால் இன்று இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பும்போது பிரதமரால் அந்த குற்றச்சாட்டு மறுக்கப்படுகிறது. இவற்றின் மூலம் வாக்காளர்களான மக்கள் உண்மை நிலவரத்தை புரிந்து கொள்ள வேண்டும். நாட்டுக்கு அரசியல் ரீதியில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இதனால் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கான நீதியைப் பெறுவதற்கு ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து பயணிக்க வேண்டும். ரணிலா, சஜித்தா என்ற போட்டிக்கு அப்பால் இந்த கூட்டணி நாட்டுக்கானதாக அமைய வேண்டும் - என்றார். (ஐ)

# போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படும் இரசாயனம் சிக்கியது

கொழும்பு, செப். 08

ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்காக கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மேலும் ஒரு தொகை இரசாயனப் பொருட்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன.

தங்காலை, நெடோல்பிட்டியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்தப் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் தங்காலை பொலிஸ் நிலைய அதிகாரிகள் அந்த இடத்தை சோதனையிட்டனர்.

இதன்போது, அந்த இரசாயன பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட இரசாயன பொருட்கள் மித்தெனியவில் கைப்பற்றப்பட்ட இரசாயன பொருட்களுடன் ஒத்துப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 4 மாதங்களுக்கு முன்பு இந்த இரசாயனங்களை யாரோ ஒருவர் இந்த இடத்தில் கொண்டு வந்து கொட்டியதாக தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைக்காக இந்த இரசாயனங்கள் நேற்று பிற்பகல் தங்காலை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ஐ)

# போட்டிபோட்டு ஓடிய பேருந்து சாரதிகள் கைது

கொழும்பு, செப். 08

கண்டியிலிருந்து ஹற்றன் நோக்கி ஒரே திசையில் ஆபத்தான விதத்தில் வேகமாக செலுத்திய தனியார் பேருந்துகளின் சாரதிகள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கண்டியிலிருந்து வெவ்வேறு நேரங்களில் பயணித்த இரு பேருந்துகளும் கினிகத்தேனை பகுதியிலிருந்து போட்டி போட்டு ஓடின.

இதனை அவதானித்த பொலிஸார் இரு பேருந்துகளின் சாரதிகளையும் கைது செய்தனர். (ஐ)

# பாவனையிலிருந்து ஒதுக்கிய லொறியை செலுத்தியவர் கைது

கொழும்பு, செப். 08

பாவனையிலிருந்து ஒதுக்கப்பட வேண்டிய லொறியை வீதியில் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சாரதி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த லொறி மூலம் விறகு ஏற்றிச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கித்துல்கல பிரதேசத்தில் இருந்து பொகவந்தலாவைக்கு இந்த விறகுகள் ஏற்றிச் செல்லப்பட்ட சமயமே சாரதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# நாட்டில் பதிவான 4 விபத்துகளில் நால்வர் பலி!

கொழும்பு, செப். 08

நாட்டின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் பதிவான 4 விபத்துகளில் 22 வயது இளைஞன் உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

புதுக்குடியிருப்பு, கடவத்தை, மரதன்கடவல மற்றும் [illegible] வெளி ஆகிய இடங்களிலேயே குறித்த விபத்துகள் பதிவானதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரையை பெற்றுத்தர துரித நடவடிக்கை வேண்டும்

## மயிலத்தமடு - மாதவனை பண்ணையாளர்கள்

மட்டக்களப்பு, செப். 08

தங்களின் போராட்டம் இரண்டு வருடங்கள் கடக்கவுள்ள போதிலும் தமக்கான தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை என மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, அரசாங்கம் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் - மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டத்தின் இரண்டு வருடம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் பூர்த்தியடைகின்றது.

எனினும், இந்த அறவழிப் போராட்டத்தில் அடைந்த நன்மைகள் குறைவு. மேய்ச்சல் தரைக்காக. ஒதுக்கப்பட்ட 3025 ஹெக்டயர் நிலப்பரப்பு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. பின்னர் 3000 ஏக்கர் தருவோம் எனக் கூறப்பட்ட போதிலும் இன்னமும் அதற்கான எந்தப் பதிவும் இடம்பெறவில்லை.



இந்த இரண்டு வருடத்துக்கான பூர்த்தியை முன்னிட்டு எங்களுடைய போராட்டம் அரசாங்கத்துக்கு ஒரு அழுத்தத்தை கொடுக்கும் என நினைக்கின்றோம்

கால்நடைகளால் நாங்கள் மட்டும் பயனடையவில்லை. அரசாங்கத்துக்கும் இதனால் வருமானம் வருகிறது.

எனவே, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர். (எ)

# தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம்

## தமிழரசுக் கட்சி எச்சரிக்கை

மட்டக்களப்பு, செப். 08

மட்டக்களப்பு, புல்லுமலை பகுதியில் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கினால் அநுர அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று தமிழ் அரசுக் கட்சியின் ஏறாவூர் பற்று உப தவிசாளர் எஸ். சர்வானந்தன் மற்றும் உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். அவர்கள் மேலும் கூறுகையில்,

"குடிநீர் என்பது ஒரு விற்பனை பொருள் அல்ல. அது இறைவனால் மனிதர்கள், உயிரினங்களின் தாகத்தை போக்குவதற்காக படைக்கப்பட்ட இயற்கை வளம். அதனை உறிஞ்சி விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குவதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

மட்டக்களப்பு, புல்லுமலை பகுதியில் கடந்த 2018ஆம் ஆண்டு காத்தான்குடி நகர சபை தவிசாளர் ஊடாக மாகா தண்ணீர் தொழிற்சாலை என்ற பெயரில் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் தண்ணீர் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்ற போது அதனை கிராம மக்கள் உட்பட மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகள், அரசியல் தலைவர்கள் என அனைவரும் எதிர்த்து போராட்டம் நடத்தினோம். அப்போதிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசும், அதிகாரிகளும் மக்கள் போராட்டத்துக்கு மதிப்பளித்து குறித்த தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்காமல் கைவிட்டனர்.

குறித்து தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்க கூடாது என ஏறாவூர் பற்று பிரதேச சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கும் போது தற்போது மீண்டும் அதே தண்ணீர் தொழிற்சாலைக்கு வேறு ஒரு வர்த்தகரின் பெயரில் அனு மதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஏறாவூர் பற்று அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குறித்த வர்த்தகரால் புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி கோரப்பட்டபோது, தண்ணீர் குறித்த ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் அனுமதி வழங்கலாம் என அபிவிருத்தி குழுத் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான பிரபு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை 150 தண்ணீர் தொழிற்சாலைகள் உள்ளதாக கூறப்படுகிறது.

அதில் ஒரு சில தொழிற்சாலைகளை தவிர அனைத்து தொழிற்சாலைகளும் தண்ணீர் மிக மிக அதிகமாக உள்ள கம்பஹா போன்ற மாவட்டங்களிலே அமைந்துள்ளது. எம்மைப் பொறுத்தமட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையில் எங்குமே நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் தண்ணீர் தொழிற்சாலைகள் அமைக்க அரசு அனுமதி கொடுக்க கூடாது" - என்றனர். (எ)



# திருகோணமலை மருத்துவமனையில் நவீன தொற்று கழிவு எரியூட்டி திறப்பு

திருகோணமலை, செப். 08

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், தொற்று கழிவு மேலாண்மையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்ட மருத்துவமனையில் நிறுவிய அதிநவீன தொற்று கழிவு எரியூட்டியை கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ திறந்து வைத்தார்.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர, பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாட்டா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜப்பானின் மொத்த நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ், நாட்டின் 14 அரசு மருத்துவமனைகளில் தொற்று நோய் மேலாண்மை அலகுகளை நிறுவ சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இரத்தினபுரி மற்றும் குருநாகலிலுள்ள இரண்டு போதனா மருத்துவமனைகள், எம்பிலிப்பிட்டி, அவிசாவெல்ல, அம்பாந்தோட்டா, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள ஐந்து மாவட்ட பொது மருத்துவமனைகள் மற்றும் ரிகில்லகஸ்கட, மஹியங்கனை, புத்தளம், மீரிகம ஆகிய இடங்களில் உள்ள ஐந்து மாவட்ட பொது மருத்துவமனைகள் ஆகியவை இந்தத் திட்டத்தில் அடங்கும். இந்த அதிநவீன தொற்று கழிவு எரியூட்டிகள் மெதிரிகிரிய, வெலிகந்த மற்றும் நகுலுகமுவ மாவட்ட மருத்துவமனையில் உள்ள ஆறு முதன்மை மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளன.

இந்த எரியூட்டி திருகோணமலை மாவட்ட மருத்துவமனையிலும் நிறுவப்பட்டுள்ளது. இந்த எரியூட்டி ஒரு மணி நேரத்துக்கு 162 கிலோ கிராம் தொற்று கழிவுகளை எரிக்கும் திறன் கொண்டது. இந்தத் திட்டத்தில் இது போன்ற 05 இயந்திரங்களும் ஒரு மணி நேரத்துக்கு 58 கிலோ கிராம் சுத்திகரிக்கப்படாத கழிவுகளை எரிக்கும் திறன் கொண்ட 10 இயந்திரங்களும் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டாசு வெடித்ததில் குடும்பஸ்தர் மரணம்

தம்பலகாமம், செப். 08

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை- சதாம் நகர் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற திருவிழா ஊர்வலத்தின் போது பட்டாசு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்த குடும்பஸ்தர் அதே பகுதியில் வசித்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை காளிராசா (வயது -45) ஆவார். குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஊர்வலத்தின் போது பட்டாசு கொளுத்திய நிலையில் ஒரு பட்டாசு வெடிக்காத நிலையில் உள்ளதை கண்டு அதனை காலால் தடவிய போது பட்டாசு வெடித்ததாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்தது.

உயிரிழந்தவரின் சடலம் தம்பலகாமம் பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-12)

# ஹற்றனில் 3,500 கிலோ கழிவு தேயிலை பறிமுதல்

## லொறி சாரதி, உதவியாளர் கைது

ஹற்றன், செப். 08

அனுமதிப்பத்திரம் இன்றி 3500 கிலோ கிராம் கழிவு தேயிலையை ஏற்றிச் சென்ற லொறியை ஹற்றன் பொலிஸார் நேற்றுக் காலை பறிமுதல் செய்தனர். அத்தோடு, இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

கண்டி மாவட்டம் கம்பளை, வெலம்பொடவிலிருந்து தலவாக்கலைக்கு கழிவு தேயிலை கொண்டு செல்லப்படுவதாக ஹற்றன் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மல்லியப்பு பகுதியில் வைத்து குறித்த லொறியை பொலிஸார் நிறுத்தி சோதனை செய்தனர். கழிவு தேயிலையை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் அந்த லொறிக்கு இல்லை என்பதைக் கண்டறிந்த பின்னர், சாரதி மற்றும் உதவியாளரை பொலிஸார் கைது செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கழிவு தேயிலை மற்றும் சந்தேக நபர்கள் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று சோதனை நடத்திய ஹற்றன் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

### குடும்பப் பெண் படுகொலை:

# தலைமறைவான சூத்திரதாரியின் சகோதரன் உட்பட இருவர் கைது

கல்முனை, செப். 08

குடும்பப் பெண் படுகொலை செய்யப்பட்ட பின்னர் தலைமறைவான பிரதான சூத்திரதாரியின் சகோதரன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஷ்ணு கோவில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த 38 வயது குடும்பப் பெண் மனோதர்ஷன் விதுஷா கடந்த மே மாதம் 30 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் படுகொலை தொடர்பில் கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி சந்தேகத்தின் அடிப்படையில் சகோதரிகளான இரட்டையர் குறித்த குடும்பப் பெண்ணின் வீட்டியில் பணிப்பெண்களாக பணியாற்றிய நிலையில் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

இருப்பினும், ஏதோ ஓர் அடிப்படையில் தொய்வு ஏற்பட்டதை உணர்ந்த படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர், ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் என பல தரப்பினருக்கு நீதி கோரி கடிதம் ஒன்றை எழுதி, படுகொலையின் சூத்திரதாரிகள் என நம்பப்படும் பலரது பெயரை சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தி யிருந்தார்.

இதற்கமைய மீண்டும் விசாரணைகளை முன்னெடுத்த அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் களுவாஞ்சிக்குடி பகுதியில் உள்ள நகைக்கடை உரிமையாளர் தான் இப்படுகொலையின் பிரதான சூத்தரதாரி எனக் கண்டறிந்ததுடன் குறித்த கடையில் பணியாற்றிய உரிமையாளரின் சகோதரன் உட்பட அக்கடையின் பணியாளரையும் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர். (எ- 01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழினப்...

தொடர்புடையவர்களாக இருந்தார் கள். குற்றங்களை செய்தவர்கள் நியா யத்தை வழங்க மாட்டார்கள். இப்போது இருப் பது மக்களின் ஆட்சி. எனவே, மக்க ளுக்கு நீதியை வழங்குவது எமது பொறுப்பாக உள்ளது. இதில் சர்வதேச தலையீடுகள் தேவையில்லை. எங்களின் பிரச்னைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். எங்களுடைய சட் டத்தின் படி நியாயத்தை வழங்க நடவ டிக்கை எடுப்போம். அதில், எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.", என்றார்.

இதேபோன்று கச்சதீவு விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்,

"கச்சதீவு இலங்கைக்கு சொந்தமா னது. இதனை எவரும் உரிமை கோர முடியாது. இந்திய அரசாங்கம் இது வரையில் கச்சதீவை தமக்கு சொந்தமா னது என்று கோரவில்லை. கச்சதீவை உரிமை கோரும் தமிழக அரசியல்வாதி களின் எண்ணத்தை நாங்கள் அறிவோம். தேர்தல் காலத்தில் மக்களை கவர்வதற் காகவே அவர்கள் இவ்வாறான பிரசாரங் களில் ஈடுபடுகிறார்கள்", என்றார். (ஐ)

## உரிய...

சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் தேர் தலை நடத்துவோம். ஜனாதிபதித் தேர் தல்,பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூ ராட்சித் தேர்தலை அடுத்தடுத்து நடத்தினோம்.

சட்ட சிக்கலால்தான் மாகாண சபை கள் தேர்தல் காலவரையின்றி பிற் போடப்பட்டுள்ளது. இந்த பிரச்னைக்கு தீர்வு காண கடந்த அரசாங்கங்கள் மேற் கொண்ட சகல முயற்சிகள் நடவடிக்கை களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினோம். அத்துடன், தேர்தல் முறைமை தொடர்பிலும் பரிந்துரை களை சமர்ப்பித்துள்ளோம்.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற் பட வேண்டும் என்ற நிலைப்பாட் டில் உள்ளோம். சகல தரப்பினரும் பிரதி நிதித்துவம் கொள்ளும் வகையில் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப் பட வேண் டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பெரும்பாலான...

பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "யாராவது ஒரு நபர் கைது செய்யப்பட்டால் அது தண்டனையாக கருதப்படுவதில்லை என அரசமைப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், நாட்டில் யாராவது கைதுசெய்யப்பட்டால் தண் டனையாக அவருக்கு கை விலங்கிடப் பட்டு, அரசியல் கண் காட்சி இடம்பெறு வதை காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த நடவடிக்கை உலக நாடுகளில் மாற்றமாகும். இந்தியா, ஜப்பான், அமெரிக்க அரசமைப்பில் இந்த உறுப் புரை இதனைவிட மாற்றமானதாகும். ஜப்பானில் விசாரணை மேற்கொண்டே கைதுகள் இடம்பெறுகின்றன. 100 பேரை விசாரணைக்கு எடுத்துக்கொண் டால், 98 பேர் குற்றவாளியாகின்றனர். ஆனால், இலங்கையில் 100 பேரை கைது செய்து விசாரித்தால் 98பேர் குற்றமற்ற வர்களாக வீடு செல்கிறார்கள்.

இதனால் இந்த கலாசாரத்தை மாற் றுவதாக இருந்தால் அரசமைப்பில் இந்த உறுப்புரைகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. விசாரணைகளை பலப்படுத்த வேண்டியிருக்கிறது. விசார ணைகளின் அறிக்கையின் பிரகாரமே நீதிமன்றம் செயல்படுகிறது. நாட்டில், இது தொடர்பான புள்ளிவிவரங்களை பார்த்தால், 100 பேர் கைதுசெய்யப்பட் டால், இருவர் குற்றவாளியாகின்றனர். 98 பேர் குற்றமற்றவர்களாக விடுதலை செய்யப்படுகின்றனர். அதனால் நாட் டில் கைதுகள் அரசியல் கண்காட்சி ஆக் கப்பட்டிருக்கின்றன. இந்த அரசியல் கண்காட்சியை எதிர்காலத்தில் அரச மைப்பு உறுப்புரைகளில் திருத்தம் மேற் கொண்டு இல்லாமலாக்க வேண்டும் - என்றார். (ஐ)

## மாணவி...

மைத்துனன் சந்திரகாந்தன் மயூரன் மற்றும் உறவினர்கள் இந்த நினைவேந் தல் நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்.

அத்துடன், "வாசலிலே கிருஷாந்தி" எனும் செம்மொழி தொடர்பான கவிதை நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நினைவேந்தலில் தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சி. சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செ. கஜேந்திரன், எம். கே. சிவாஜிலிங்கம், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ், பொது அமைப்பு களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## ஜெனிவா...

பின்னர், இலங்கை நேரம் பிற்பகல் 3.45 மணிக்கு இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை குறித்து விவாதம் நடை பெறும். இதில், உறுப்பு நாடுகளின் பிரதி நிதிகள் தமது நாடுகளின் நிலைப்பாடு தொடர்பில் கருத்துகளை முன்வைப்பர்.

பிரதிநிதிகளின் கருத்துகளின் பின் னர், இலங்கை அரசாங்கத்தின் நிலைப் பாடு - முன்னெடுத்துள்ள நடவடிக்கை கள் தொடர்பில் வெளிவிவகார அமைச் சர் விஜித ஹேரத் விளக்கமளிப்பார்.

இதேநேரம், இன்று ஆரம்பமாகும் கூட்டத் தொடரில் பிரிட்டன் தலைமை யிலான உறுப்பு நாடுகளால் பேரவை யில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரே ரணை குறித்த உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடல்கள் எதிர்வரும் 15ஆம் திகதியின் பின்னர் நடைபெறும் என்று அறிய வருகிறது. (ஐ)

## எந்த...

நெருக்கடிகளும் வலுப்பெற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர வைக்கு சென்றவர்கள் வெறும் அறிக்கை களை சமர்ப்பித்து வந்துள்ளார்களே தவிர, அங்கு வழங்கும் உறுதிமொழி களை உள்நாட்டில் நிறைவேற்றுவதில் ஆர்வம் செலுத்தவில்லை. இதுவரை காலமும் இவ்வாறானதொரு நிலை மையே நாட்டில் இருந்துள்ளது. சர்வ தேசத்துடன் தொடர்புப்பட்ட விடயங் களாக இவற்றைக் கருதும்போது இது வொரு தவறான அணுகுமுறையாகும்.

"ஜெனிவா மனித உரிமைகள் விட யத்தில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவது - கொள்கை ரீதியாக செயல்படுவது என்பது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே, தீர்மானங்களை எடுத்துள்ளது. உதாரணமாக செம்மணி (அரியாலை) மனிதப் புதைகுழி உட்பட பல விடயங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊடகங்களை அழைத்துச் சென்று அந்த விசாரணை களை பிரசாரம் செய்ய வேண்டிய தேவை இல்லை.

"மறுபுறம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசார ணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விசாரணைக்கும் அரசாங்கம் தடையாக இருக்கவில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டு கள் தொடர்பில் ஆதாரங்கள் இருப்பின் முறைப்பாடு செய்யலாம். சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். யாரையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டில்லை.

"ஜெனிவா குற்றச்சாட்டுக்களில் நிபு ணத்துவ ஒத்துழைப்புகளை சர்வதேசத் திடம் இருந்து பெற்றுக்கொள்ளவும் வெளிப்படைத்தன்மையுடன் செயல் படவும் தயாராகவே உள்ளோம். ஆனால், விசாரணைகளின் பொறுப்பாளர்களாக இலங்கை இருக்கும். வெள்ளைக்கொடி விவகாரம் மட்டுமல்ல, முன்னெடுக்கப் பட வேண்டிய எந்தவொரு விசாரணை களுக்கும் அரசாங்கம் தடையாக இருக் காது", - என்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப் பிட்டுள்ளார். (ஐ)

# ரணில் இப்போது பாராளுமன்றில் இருந்தால் நாட்டுக்கே நல்லது!

## ஐ. தே. க. பிரதித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, செப். 08

நாட்டின் தற்போதைய நிலையில் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் இருந்தால் அது நாட்டுக்கு நல்லது. என் றாலும், அவர் பாராளுமன்றம் செல்வது தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மான மும் எடுக்கவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்தார்.

பௌர்ணமி தினமான நேற்று ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறி கொத்தவில் தானசாலையை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "நாட்டின் தற்போதைய நிலைமையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் இருந்தால் நாட்டுக்கு நல்லது என்றே நான் நினைக்கிறேன். என்றாலும் அதுதொடர்பான எந்த தயார் நிலையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. அவர் பாராளுமன்றத்துக்கு செல்வதாக இருந்தால், சரியான நேரம் காலம் பார்த்து செல்வார். என்றாலும் இது தொடர்பில் எந்த கலந்துரையாடலும் தற்போது இடம்பெறவில்லை.

இதேநேரம் கூட்டு எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க் கட்சித் தலைவர் பணிமனையில் நடை பெற்று வருகின்றன. அந்த நடவடிக்கை கள் வெற்றிகரமாக இடம்பெற்று வரு கின்றன. ஐக்கிய தேசிய கட்சியும் அதில் கலந்துகொண்டு கூட்டாக செயல்படு வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். எதிர்க்கட்சியில் இருக்கும் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர் வரும் காலங்களில் கூட்டு எதிர்க்கட்சி ஒன்றை அமைத்துக்கொள்ள முடியுமா கும் என நம்புகிறோம் - என்றார். (ஐ)

# ரணிலின் வீட்டை சேதப்படுத்திய இருவரை விசாரிக்க அனுமதி!

கொழும்பு, செப். 08

காலிமுகத்திடல் போராட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தை சேதப் படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் சந் தேகநபர்கள்மீது மேலதிக விசாரணை களை முன்னெடுக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து சட்டமா அதி பரின் ஆலோசனையைப் பெற கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு கோட்டை நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தற்போது பிணையில் விடுவிக் கப்பட்டனர். குறித்த இருவரையும் ஜனவரி 14ஆம் திகதி மன்றில் முன்னி லையாகுமாறு கோட்டை நீதிவான் உத்த ரவு பிறப்பித்துள்ளார். (ஐ)

# எல்ல - இராவண எல்ல பிரதேசத்தில் 10 ஆபத்தான இடங்கள் அடையாளம்!

கொழும்பு, செப். 08

எல்ல - வெல்லவாய வீதியின் எல்ல - இராவண எல்ல இடையே ஆபத்தான 10 இடங்கள் அடையாளம் காணப்பட் டுள்ளன என்று பதுளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரி வித்துள்ளது.

இந்த இடங்கள் தொடர்பில் விசேட ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாக பதுளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதி கார சபையின் நிறைவேற்று பொறியியலா ளர் எஸ். எஸ். ஹேறநாயக்க தெரிவித்தார்.

இந்த வீதியின் இரு புறங்களையும் அவ தானத்துடன் மீள கட்டமைக்கும் பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்கீழ் 26 கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதி மீள்கட்டமைக்கப்படவுள்ளது.

பதுளை மாவட்டத்தில் விபத்துகளை தவிர்ப்பதற்காக 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உள்நாட்டு...

செம்மணியில் நேற்று நடந்த கிருஷ ாந்தி குமாரசாமியின் 29ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அத்துடன், எமது மண்ணில் சிறு வர்கள், பெண்கள், பெரியவர்கள் என்று வகைதொகையின்றி இலட்சக்கணக்கான வர்கள் அரச படைகளால் கொன்றொ ழிக்கப்பட்டனர். இது பொதுமக்கள் மீது பேரினவாத அரச கொள்கையின் மூலம் முன்னெடுக்கப்பட்ட அரச பயங்கரவா தமும் இனப் படுகொலையுமாகும்.

கிருஷாந்தி உட்பட நூற்றுக்கணக்கா னவர்கள் அரச கட்டுப்பாட்டு பகுதியில் தினந்தினம் கொன்று புதைக்கப்பட்ட னர். இவ்வாறு கொன்று புதைக்கப்பட் வர்களின் ஆன்மாக்கள் நீதிகோரி மீண் டெழுந்து நிற்கின்றன.

இப்போதுகூட நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. இலங்கை அரசு அல்லது அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த விசாரணையும் சர்வதேசத்தை ஏமாற்றுவதையும் நீதி விசாரணைகளை காலதாமதத்துக்கு உட்படுத்தி சாட்சியங்களை வலுவற்ற தாக்கும் உத்திகளுமாகும். தற்போதும் ஜெனிவாவில் அதற்கான நகர்வு ஒன் றையே அரசாங்கம் மேற்கொள்கின்றது.

நாங்கள் எமது இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படு கொலைக்கு சர்வதேச நீதி ஒன்றே தீர்வு என்பதில் உறுதியாகச் செயல்பட வேண் டிய பொறுப்புடையவர்கள் - என்றார். (ஐ)

## பிறந்து...

இவ்வாறு உயிரிழந்தது.

நேற்று மதியம் குழந்தைக்கு பாலூட் டிய தாயார் அதனை நித்தி ரையாக்கி யுள்ளார். பின்னர், மதியம் 1.30 மணி யவில் குழந்தையை தூக்கத்திலிருந்து எழுப்பியுள்ளார். அப்போது குழந்தை வாந்தியெடுத்தது.

இதையடுத்து, பெற்றோர் உடனடி யாக குழந்தையை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற னர். ஆனால், குழந்தை ஏற்கனவே உயிரி ழந்து விட்டதாக பரிசோதித்த மருத்து வர்கள் தெரிவித்தனர். (ஐ)

## சர்வதேச...

மூலமாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத் திடம் இந்த நிபுணத்துவ உத வியை தமது பணிமனை அதிகாரிகளுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ள தாக, காணாமல் போனோர் தொடர் பான அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.

மேலும், "அரியாலை மனிதப் புதை குழி விவகாரத்தில் அகழ்வு பணிகளை நாம் முன்னெடுக்கவில்லை. மாறாக, தேவையான ஏனைய நடவடிக்கைக ளையே முன்னெடுக்கிறோம் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 62 ஆயிரம் பேர் இந்த ஆண்டு அரச சேவையில் இணைவர்

**ஜனாதிபதி அநுர குமார**

கொழும்பு, செப். 08

**இந்த ஆண்டு புதிதாக 62 ஆயிரம் பேரை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது - ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

மொனராகலை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விவசாய நிலங்கள் தொடர்பான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான முறையான பொறிமுறையை வகுக்குமாறு இந்தக் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தலும் ஜனாதிபதி வழங்கினார். (ஐ)



## பவுஸர் - ஓட்டோ விபத்து; சிறுவன் ஒருவர் காயம்!

கொழும்பு, செப். 08

எரிபொருள் பவுஸர் முச்சக்கர வண்டியை மோதியதில் சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

வட்டவளை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பவுஸர் வாகனம் வளைவு ஒன்றில் திரும்பியபோது பின்புறமாக வந்து முச்சக்கர வண்டி மோதியுள்ளது.

தனது தாயுடன் முச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவனே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஒரு கட்சி ஆட்சிமுறை நோக்கி தற்போதைய அரசு நகர்கிறது!

கொழும்பு, செப். 08

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வாதிகார ஒரு கட்சி ஆட்சி முறைமையை நோக்கியே நகர்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது - என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வாதிகார ஒரு கட்சி ஆட்சி முறைமையை நோக்கியே நகர்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதன் பிரதிபலனாகவே மிலிந்த ராஜபக்ஷ மற்றும் எராஜ் ஆகியோருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரின் மௌனம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

மறுபுறம் வியத்புர திட்டத்தின் கீழ் வீடுகளைக் கொள்வனவு செய்தவர்களுக்கான சலுகைகள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். 210 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுக்கு இறுதியில் 310 இலட்சம் ரூபாய் செலுத்துகிறோம். இதில் எமக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் தவறுகளையும் குறைபாடுகளையும் மறைப்பதற்காக இவ்வாறு மக்களின் கவனத்தை எதிர்க்கட்சியினர் மீது திருப்புகின்றனர். இதை நாம் நீதிமன்றம் ஊடாக சவாலுக்கு உட்படுத்துவோம் - என்றார். (ஐ)

## சட்டவிரோத விற்பனை; மது போத்தல்கள் சிக்கின

நுவரெலியா, செப். 08

சட்டவிரோதமாக விற்பனைக்கு வைத்திருந்த ஒரு தொகை மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, வீடு ஒன்றின் பின்புறத்தில் உள்ள மரக்கறி தோட்டத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மதுபான போத்தல்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பூரணை தினத்தில் மதுபான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால், அதிக விலைக்கு இந்த மதுபான போத்தல்களை சந்தேக நபர் விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்ததாக தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 5 ஆயிரம் இலங்கையர்கள் வீசா இன்றி இஸ்ரேலில்!

கொழும்பு, செப். 08

சுமார் 5 ஆயிரம் இலங்கையர்கள் இஸ்ரேலில் வீசா இன்றி தங்கியிருக்கின்றனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் உள்ள இலங்கை பத்திரிகையாளர்கள் குழுவை சந்தித்த தூதர், முந்தைய அரசாங்கத்தின் சில அமைச்சர்களின் நடவடிக்கைகள் காரணமாக இவர்களுக்கு வீசா வழங்குவதற்கான முயற்சிகள் தடைப்பட்டன என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் 2 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகிறது.

தற்போது, 25 ஆயிரம் இலங்கையர்கள் இஸ்ரேலில் பணிபுரிகின்றனர். அடுத்த டிசெம்பர் மாதத்துக்குள் சுமார் 4 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகளைப் பெறுவார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போது, மனித கடத்தல்காரர்கள் சட்டவிரோதமாக வேலைகளை வழங்குகிறார்கள். மேலும், மது மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமாக சில இலங்கை வேலை தேடுபவர்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்கிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 38 பேர் கைது!

கொழும்பு, செப். 08

"மதுபோதையில் வாகனம் செலுத்திய 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்காக சுமார் 25 ஆயிரத்து 829 பேர் பரிசோதிக்கப்பட்டனர்.", என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மாஅதிபரின் அறிவுறுத்தலின் அடிப்படையில், நாடு முழுவதும் குற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், 672 சந்தேக நபர்களும் குற்றச் செயல்களுடன் நேரடியாக அடையாளம் காணப்பட்ட 16 பேரும் தினசரி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 171 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 131 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டனர்.

மேலும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 09 வழக்குகள் மற்றும் 3,439 பிற போக்குவரத்து குற்றங்களும் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## குற்றக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றில் அறிக்கை

கொழும்பு, செப். 08

கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட குற்றக்குழுவை சேர்ந்தவர்கள் மற்றும் நாட்டில் நடைபெறும் குற்றக்குழு நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையை வெளியிடவுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்த அறிக்கையை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால வெளியிடவுள்ளார்.

இதனிடையே, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் குற்றக்குழு நடவடிக்கைகள் மற்றும் அவ்வப்போது நடைபெறும் துப்பாக்கிச் சூடுகள் குறித்து கேள்விகளை எழுப்ப முடிவு செய்துள்ளன.

நாடு முழுவதும் அவ்வப்போது நடைபெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலாக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெளிநாட்டு தொழிலாளர் மூலம் நாட்டுக்கு 511 கோடி டொலர்கள்!

கொழும்பு, செப். 08

ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான காலப் பகுதியில் வெளிநாட்டு தொழிலாளர் பண அனுப்பல் மூலமாக 511 கோடியே 60 இலட்சம் டொலர் நாட்டுக்கு கிடைத்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 19.3 சதவீத அதிகரிப்பாகும் என்று இலங்கை மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் சுற்றுலா வருவாய் 203 கோடி அமெரிக்க டொலரை கடந்துள்ளது. இது கடந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் பதிவான 188 கோடி அமெரிக்க டொலர் சுற்றுலா வருவாயுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீத அதிகரிப்பாகும்.

## பாடசாலை இடம்பெறும் நேரம் கனிம போக்குவரத்துக்கு தடை

கொழும்பு, செப். 08

பாடசாலை இடம்பெறும் நாட்களில் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குத் தடை விதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

இதன்படி, பாடசாலை நாட்களில் காலை 06. 30 மணி முதல் 07. 45 மணி வரையிலும் முற்பகல் 11. 30 மணி முதல் பிற்பகல் 02. 30 மணி வரையிலும் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட வேண்டும் என அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பாடசாலை போக்குவரத்தில் ஈடுபடும் வானுடன் மணல் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மோதி விபத்துக்குள்ளானதை அடுத்து முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறித்த பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் தீபானி வீரக்கோன் தெரிவித்தார்.

அதன்படி, குறித்த காலப்பகுதியில் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாகனங்கள் வீதியோரத்தில் முறையாக நிறுத்தப்பட வேண்டும் என அவர் கூறினார். (எ)

## போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் கைது

கொழும்பு, செப். 08

200 மில்லியன் ரூபாய் பெறுமதியான 20. 9 கிலோகிராம் குஷ் ரக போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கிராண்பாஸ் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் போதைப்பொருளுடனான அவரது பயணப் பொதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தாய்லாந்தில் இருந்து நாட்டை வந்தடைந்ததாக கூறப்படுகின்றது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org